முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 654**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

14.07.2021, புதன்கிழமை

1. ஞான சக்தியே அரங்கா போற்றி
ஞானிகள் பலம் கொண்ட தேசிகா போற்றி
தானதர்ம சக்தி கூட்டி
தரணியை மாற்றவந்த குருராஜனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞானஅறிவுரை ஆசி
மாற்றம் செய்து இந்த உலகை மீட்க
மாதவசியாக வந்த அரங்கனே
3. அரங்கனே உன் சன்மார்க்கம் உலகை ஆளும்
ஆற்றல்மிக்க உன் தர்மம் உலகை வெல்லும்
மாற்றம் தந்து உலகோர் ஞானம் பெற
மாதவம் புரிந்து தர்மசக்தியாய் இயங்கும்
4. இயங்கும் அரங்கனே உன் கொள்கை வழியே
இந்த உலகம் நல்கதி அடையநேரும்
தயங்காது அரங்கன் உன் தொண்டர் படைகள்
தரணிஎங்கும் செய்துவருகின்ற ஓங்கார முழக்கம்
5. முழக்கத்தின் மூலம் இந்த கலியுகம்
முழுமையான ஞான யுகமாக மாற்றம் பெறும்
கலக்கமற எங்கும் சமத்துவம் சமதர்மம்
கலியில் தவசி உன் சக்தியின் மூலம் ஏற்றம் கண்டு
6. கண்டுமே கலியுகம் சகல இடர்களையும் வென்று
கந்தப்பெருமான் என் சக்தியான உன் அருள் வழி
உண்டாகும் ஞானயுகமாற்றம்
உயர்வான சக்தியூட்டி உமக்கு
7. உமக்கு யானும் ஆறுமுகன் உகந்தபடி சர்வபலம் தந்து வருக
வருகவே அரங்கன் உன் உணவுமுறையில் இருந்து
வல்லமைபட வாசி வசங்கள் சகலதும் சூட்சுமமாய் முருகப்பெருமான் யான்
வழிநடத்தி சுருதிபடி உன் சேவைகளையும் காத்துவர
8. வருகவே அரங்கன் உன் சொல் செயல் அனைத்தும்
வடிவேலன் என் சக்தியாகும்
தருகின்ற தர்மங்கள் அனைத்தும்
தண்டாயுதன் என் அருள் பலமாகும்

9. ஆகவே உன் சேவையில் கலந்த மக்கள் அனைவரும்
ஆறுமுகன் என்னால் ஞானியாக்கப்பட்டு
யுகமே பெருமாற்றம் சடுதி காணும்
உரைத்திட்ட ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—